

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
குருவே துணை
வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து...
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்

# திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து

## அருள்நிதி

## மன்னார்குடி பானுகுமார்

சிவானந்தம் மேலிடுதல்

(தான் பெற்ற சிவானந்தத்தை வியத்தல்)

### இதனுள்ளே . .

- சிவானந்தம் மேலிடுதல் https://youtu.be/-8CPYdim7Zs
- வினைகளை நாளும் அழிப்பவனே! https://youtu.be/XZkyjIwXLo8
- ஆருடல் புகுந்தான் உயிர் கலந்தான் https://youtu.be/lTkiuYWWFxM
- நான் என்பது அறியேன் https://youtu.be/FtznME8VZYQ
- எனைத்தான் புகுந்து ஆண்டான் https://youtu.be/XkU8Wa_8zyc
- நற்றாம் கதி அடைவோம் https://youtu.be/QiRqHgILXaE
- உடலிலும் உயிரிலும் புகுந்து நீக்கமற நிறைந்தான் https://youtu.be/nL0RAflS8GQ
- வேண்டாமை வேண்டும். https://youtu.be/AW0j2dnN9Qo
- இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா! https://youtu.be/0F5nU1-N7L4
- அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம் https://youtu.be/1dfRyxafkWI
- உய்யும் நல்வழி உள்ளுணர் தவமே https://youtu.be/vA-XfUyUBG4

# 1. சிவானந்தம் மேலிடுதல்

உயிருண்ணிப் பத்து என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள பத்துப் பாடல்களிலும் இந்தச் சொல் இடம்பெறவில்லை.

எனவே, பிற்காலத்தார் அவர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொடுத்த தலைப்பு என்று கொள்வதில் தவறில்லை.

உண் என்ற பகுதி கால இடைநிலைகளோடு சேர்ந்து, அன் விகுதி பெற்று, உண்டனன். உண்பவன் என வருவதுபோல இங்கும் இகர விகுதி பெற்று உண்ணி என்று வந்துள்ளது.

இங்கே உண்ணுதல் என்பது தன்வயமாக்குதல் என்ற பொருளைத் தரும். திருவருள் தனியேயும், உயிர் தனியேயும் நின்ற நிலை போக, திருவருள் உயிரைத் தன்வயப்படுத்தி ஆனந்தத்தால் நிரப்புதலின் உயிருண்ணி என்றார்.

ஒருவன் ஒரு பொருளை உண்டான் என்றால், உண்ணப்பட்ட சில நேரம்வரை உண்டவனின் உள்ளே சென்ற உணவு தனித்தே நிற்கும்.

பின்னர் அந்த உணவு தன்னிலை மாறிக் குருதியில் கலந்துவிடுகிறது.

அதேபோலத் திருவருளால் உண்ணப்பெற்ற உயிர், உண்ணப்படும் வரை தன் தனிநிலையில் நின்று, பின்னர்த் திருவருளில் மூழ்கிய நிலையில் தற்போதத்தை இழந்துவிடுகிறது.

அப்படி இழந்துவிட்ட நிலையில் மிஞ்சுவது ஆனந்தம் ஒன்றேயாம்.

மாணிக்கவாசகரின் ஆன்மாவை உண்டு, தன்வயப்படுத்திக் கொண்டு, ஆனந்தத்துள் அமிழ்த்திக் கரையுமாறு செய்து விட்டபின் அங்கே உயிரை உண்ட திருவருள் மட்டுந்தான்.



ஆன்மாவைத் தூய்மைப்படுத்துவது - சிவனது அருளும், அதனைத் தன்னுட்படுத்துக் கொள்வது- சிவனது ஆனந்தமும் ஆதல் பற்றிச்- சிவானந்தத்திற்கு `உயிர் உண்ணி` என்னும் ஆக்கப் பெயர் கொடுத்து, அதனைப் பொருளாக உடைய பத்துப் பாடல்களை இப்பகுதியில் மாணிக்கவாசகர் அருளிச்செய்கின்றார்.

எனவே, `உயிது உண்ணிப் பத்து` என்பது, `உயிது உண்ணியின்மேற் பாடப்பட்ட பத்துப்பாடல்கள்` என்றானும், உயிது உண்ணியைப் பற்றிய பத்துப் பாடல்கள் என்றானும் பொருள்தருவதாம்.

`உயிது உண்ணி` என்பது, மிக்கெழும் சிவானந்தம் என்பது பற்றியே இதற்கு, `சிவானந்தம் மேலிடுதல்` எனக் குறிப்புரைத்தனர் முன்னோர். இனி இந்த பத்துப் பாடல்களையும் தனித்தனி தலைப்பகளில் சிந்திப்போம். வாழ்க வளமுடன்.

## 2. வினைகளை நாளும் அழிப்பவனே!

அப்பர் தனது சகோ ரியால் தீவிர சிவ பக்தனாக மாறி விட்டார். இது பிடிக்காத சமணர்களின் பேச்சைக் கேட்டு, கலிங்க மன்னன் அவரைச் சுணை ணாம்புக் காளவாய்க்குள் தள்ளினான்.

சிவத் தியானத்தில் நிலைத்திருந்த அப்பர் பெருமான் யாதொரு தீங்கும் இன்றி புடம் போட்டத் தங்கம் போல மீண்டு வந்தார்.

அப்பொழுது காலவாய்க்குள் தான் இருந்த பொழுது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை விளக்குகிறார்,

"மாசில் வீணையும், மாலை மதியமும்,
வீசுதென்றலும், வேங்கிள வேனிலும்,
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே." என்றார்.

குற்றம் ஏதும் இல்லாத இனிமையான வீணை இசை, மாலைச் சந்திரன், தென்றல், இளவேனில், வண்டுகள் மொய்க்கும் தடாகம் போன்ற குளிர்சியான இறைவனின் பாதங்களில் மனதை வைத்து ஆனந்தத்தை அனுபவித்தபடி இருந்தேன் என்கிறார்.

இதில் ஒரு சூக்குமம் உள்ளது. அதாவது, வீணை இசை என்பது பிரபஞ்சத்தின் தோற்றமான நாத பிரம்மத்தைக் குறிப்பது.

மதியாகியச் சந்திரன் அறிவில் தெளிவாகிய ஞானத்தைக் குறிப்பது. மதி என்றால் அறிவுதானே?

பிறகு பிரபஞ்சத்தின் முதல் அசைவை தென்றல் என்றும், உஷ்ணத்தையும், ஒளி, நிறம் இவற்றைத் தரும் சூரியனையும், பிரபஞ்ச உயிரோட்டத்தை அருவியாகவும் குறிப்பிடுகின்றார்.

பாருங்கள் நான்கே வரிகளில் பிரபஞ்சத்தின் தோற்றம், இயக்கம் பற்றி விளக்கி விட்டார். இதை எவ்வாறு அவரால் செய்ய முடிந்தது? இறைவனோடு மனதை இரண்டறக் கலந்ததால்தான் முடிந்தது.

எனவே அவரும் ஒரு யோகிதான். இதற்கு பொருந்தும் வகையில் மாணிக்க வாசகர் தரும் பாடலைப் பாருங்கள்.

"முக்தி நெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்தி நெறியறிவித்துப் பழவினைகள் பாறுவண்ணஞ்
சித்த மலமறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனுக் கருளியவாறு ஆர்பெறுவாரச்சோவே!"

முக்தி நெறியைப் பற்றி அறியாமல் திரிந்த எனக்கு பக்தி நெறியை அறிவித்து, முந்தை வினைகளை அழித்து, மனதை மாசற்றதாக ஆக்கி, என்னையே சிவமாக்கி ஆட்கொண்ட உன் கருணையை என்னென்பேன் இறைவா! என்கிறார்.

சிவத்தை அடைய மனதை அழிக்க வேண்டும் என்ற கருத்தைப் புறந் தள்ளி, மனதையே சிவமாக்கி மேன்மையடைந்தவர்கள் அறுபத்து மூவர்.

”பைந்நாப் பட அரவேரல்குல்
  உமைபாகம் தாய் என்
மெய்ந்நாள்தொறும் பிரியா வினைக்
  கேடா விடைப்பாகா
செந்நாவலர் பசும்புகழ்த்
  திருப்பெருந்துறை உறைவாய்
எந்நாள்களித்து எந்நாள் இறு
  மாக்கேன் இனியானே.” (திருவாச.பா. 506)

- அழகிய படமும் நாக்கும் உடைய பாம்பு போன்ற அல்குலைக் கொண்ட உமையை பாகமாக உடையவனே!
- இடபத்தில் ஏறி வருபவனே!
- செம்மையான நாவன்மை உடைய புலவர்கள் போற்றும் திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருப்பவனே!

என்னுடைய உடம்பை இடமாகக் கொண்டு என் வினைகளை நாளும் அழிப்பவனே! இனி நான் எந்த நாளில் மகிழ்வது? எந்த நாளில் இறுமாந்து இருப்பது?

அகநோக்குப் பயிற்சியின் மூலம் வினைப்பதிவுகளைப் போக்கி எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்கிறது வேதாத்திரியம்.

"அகநோக்குப் பயிற்சியின் மூலம் வினைப் பதிவுகளைப் போக்க முடியும். முதலில் மனதை உயிரில் ஒடுக்கி ஆன்ம உணர்வு பெற வேண்டும்.

பிறகு, உயிரை இறைநிலையில் ஒடுக்கித் தெய்வ உணர்வைப் பெற வேண்டும்.

இன்ப, துன்ப உணர்வுகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் மனிதன் இந்நிலையில் உண்மையுணர்வு பெற்றுப் பின் மனம் மற்றும் உடல் நிலைகளைக் கடந்து, உயிர் நிலையில் நிலைத்துப் பின் உயிர் நிலையையும் தாண்டித் தெய்வ நிலையில் லயித்து ஆற்றும் செயல்களெல்லாம் - கடமையுணர்வின் கீழ் எல்லோருக்கும் பயனாகும்.

அறிவோ, தூய்மையான மெய்ப்பொருளோடு ஒன்றி நிற்கும். இங்கு பதிவான பழிச்செயல்கள் செயலுக்கு வராதது மட்டுமல்ல, முன்பிருந்த பதிவுகள் யாவும் அடியோடு முறிந்தும் போகும்".

இதனை வள்ளுவர்,

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்று கூறியுள்ளார்.

## 3. ஆருடல் புகுந்தான் உயிர் கலந்தான்

பொதுவாக பேசும் போது இன்பம் என்ற வார்த்தையை கேட்டிருப்போம்.

நாம் அனுபவிக்கும் இன்பம் சிற்றின்பமே. அதையும் தாண்டி ஒரு இன்பம் - அதுவும் பேரின்பமாக உள்ளது.

நம்மில் சிலர் சில நொடிகளில் பேரின்பம் அனுபவித்து இருப்போம். சிலர் ஆலயங்களில், சிலர் மகான்களின் ஆசியில், சிலர் இயற்கையின் வனப்பில், என்று சொல்லலாம்.

மனவளக்கலை அன்பர்கள் துரியாதீத தவத்தில் பேரின்பம் அடைந்திருக்கலாம்.

நான் ஆர்அடி அணைவான் ஒரு
  நாய்க்குத் தவிசு இட்டு இங்கு
ஊன் ஆருடல் புகுந்தான்உயிர்
  கலந்தான் உளம்பிரியான்
தேனார்சடை முடியான் மன்னு
  திருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாததோர்
  வளம் ஈந்தனன் எமக்கே. (திருவாச.பா. 507)

- தேன் ஒழுகும் பூக்கள்  சூடிய சடாமுடியை உடையவனே! நிலைபெற்று விளங்கும் திருப்பெருந்துறையில் வாழ்பவனே!

நான் யார்?  (எந்த தகுதியும் இல்லாதவன்) நானும் திருவடியை அடையும் பொருட்டு, எனக்கு ஓர் உயர்ந்த இருக்கையைத் (ஆசனம்) தந்து, ஊனால் ஆகிய உடம்புள் புகுந்தான்.

உயிரிலும் கலந்தான்.  என் உள்ளத்தை விட்டு எப்பொழுதும் பிரிவதும் இல்லை.  வான உலகத்தவரும் அறியாத ஒருசெல்வத்தை (இன்பம்) எனக்குத் தந்து அருளினான்.

சிந்தையில் நிறுத்துவோமாக! மெய்ப்பொருளை தேன் ஒழுகும் ஊற்று என்கிறார் மாணிக்கவாசகர்.  இன்ப ஊற்று என்கிறது வேதாத்திரியம்.

இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா –
எங்கும் இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா!
அன்பும் கருணையுமாய் அனைத்து உயிர்களூடும்
இன்ப ஊற்றாய் அறிவாய் இயங்கும் பராபரமே. (இன்ப ஊற்றாய்)

எழிலுலகம் படைத்து எல்லா உயிர்களுக்கும்
வழிவழியாக வாழ வாய்ப்பை நிரப்பி வைத்து
ஒழிவிலாத் தொடராக உள்ளும் புறமும் ஊற்றாய்
அழிவிலாப் பேரின்ப அறிவலையாய்த் திகழும், (இன்ப ஊற்றாய்)

உண்மை நிலை மறந்து உணர்வு தன்முனைப்பாகி,
எண்ணம் ‘தான்’ ‘தனது’ என்று இறுகிக் குறுகி நின்று
மண்ணைப் பொன்னை மென்மேலும் மாறிமாறி நினைந்து
கண்ணும் கருத்தும் தீய காமம் புகாமல் என்னுள் (இன்ப ஊற்றாய்)

உடலாய் எனை நினைந்தேன் உணர்ச்சிகள் வருந்தின
உடலுள் உயிராய் என்னை உயர்ந்து அறிவில் நிறைந்தேன்
உடலுயிர் ஊடறிவாய் உன்னை உணர்ந்தபோது
உடலுயிர் அறிவு நீயாய் உணர்ந்துன்னுள்நான் அடங்க... (இன்ப ஊற்றாய்)

வினைப்பதிவாம் சுமையை விடுத்துத் தூய்மை பெறவே
நினைவாய் உடலெடுத்தேன் நிலம் மீது விழுந்த பின்னே

எனை மறந்தேன் என்றன் வினை மறந்தேன் இறைவா!
எனை மறந்தேன் ஆனால் நீ உள் நிறைந்து எனை மீட்டு" (ஞா.க.பா.1646-2)

இன்ப ஊற்றாக எங்குமே நிறைந்த மெய்ப்பொருளாகிய இறைநிலை, அனைத்து சீவ இனங்களிலும் அன்பும் கருணையும் வெளிப்படுத்தும் அறிவாக இயங்குகிறது.

மெய்யடியார்களுக்குப் பேரின்பமாகி அமுத ஊற்றாய்ப் பீ றட்டு கொண்டுள்ளது மெய்ப்பொருள் என்கிறார் தாயுமானவர்,

பேரின்பம் என்றால் என்ன? வேதாத்திரியம் அழகாக பேரின்ப ஊற்றான மெய்ப்பொருளை அடையாளம் காட்டுகிறது.

அதைவிடப் பெரிய இன்பம் இல்லை என்பதைக் குறிக்க பேரின்பம் என்கிறோம். ஊற்று என்பது குறைவில்லாமல் தொடர்ந்து வந்து கொண்டேயிருப்பது. இன்பமானது நீடித்தும் நிலைத்தும் இருப்பது ஆகும்.

மன அலைச் சுழலானது குறைந்து அறிவு என்ற நிலைக்குப் போகும்போது. தன்னையே எல்லாவற்றிலும் எல்லாவற்றையும் தனக்குள்ளேயும் காண்கின்ற அகத்துணர்வு ஏற்படும்.

பேரின்பம், பேரானந்த நிலையாகும். இன்ப ஊற்றாக எங்குமே நிறைந்த இறைநிலை, அனைத்து சீவ இனங்களிலும் அன்பும் கருணையும் வெளிப்படுத்தும் அறிவாக இயங்குகிறது.

பரம் என்றால் அதைவிடப் பெரிதும் நுண்ணியதும் இல்லை. இணையானதுமில்லை என்பதாகும். அதனையே பேரறிவு என்கிறோம்.

பிரபஞ்சமாகி எண்ணிலடங்காத கோள்களிலே, நில உலகமும்,சீவ இனங்களுமாகி தொடர்ந்து வழிவழியாக வாழ்வதற்கு வாய்ப்புகளையும் நிரப்பி வைத்து, ஓய்வு இல்லாமல், அகமும் புறமுமாக, அழிவில்லாத பேரறிவாக எல்லாவற்றிலும் இருந்து இயக்கி. காத்து, முடித்தும் வைக்கிறது.

இந்த உண்மைகளை எல்லாம் மறந்த மயக்க நிலையில் தன்முனைப்பின் காரணமாக அழிந்து போகக்கூடிய உடலையே நான் என்று கருதியபோது உணர்ச்சிவயப்பட்ட நிலையில் துன்புற்றேன்.

உடலுக்குள் உயிர். உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே நானாகவும், நீயாகவும் இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

கர்ம வினைப் பதிவுகளைக் கழித்து ஆன்மாவைத் தூய்மை செய்து கொள்வதற்காகவே உடலெடுத்து நில உலகில் வாழ்ந்து கொண்டுள்ளேன்.

பிறவியின் நோக்த்தையும் என் வினைகளையும், உன் பெருமையையும் மறந்துவிட்டேன். ஆனால் நீ என்னுள்ளே அறிவாக நிறைந்து வழி நடத்துவாயாக.

## 4. நான் என்பது அறியேன்

மயிர்க்கூச்செடுத்து கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகுமோ அவனுக்கு அது தான் கடைசிப் பிறவி.

படகு தண்ணீரில் இருக்கலாம். ஆனால் தண்ணீர் படகினுள் நுழையக் கூடாது.

மனிதன் உலகத்தில் வாழலாம். ஆனால் உலக ஆசை அவனிடத்தில் இருக்கக் கூடாது.

சம்சார வாழ்க்கையில் இருந்தால் என்ன? அனைத்தையும் அவனுக்கே அர்ப்பணம் செய்து அவனிடம் சரணமடைந்து விடு.

அதன் பிறகு உனக்கு எவ்விதக் கஷ்டமும் இருக்காது. யாவும் அவனது அருளாலே நடை பெறுகிறது என்பதை அறிவாய்

காந்த ஊசி எப்போதும் வடக்குத் திசையையே காட்டுமாதலால் கடலில் செல்லும் கப்பல்கள் திசை தவறிப் போவதில்லை.

மனிதனுடைய மனம் இறைவனை நாடியிருக்கும் வரையில் அவன் உலக வாழ்க்கையாகிய கடலில் திசை தப்பிப்போக மாட்டான்.

ஒருவர் சிரமப்பட்டு விறகும் பிறவும் தேடி நெருப்பு உண்டாக்குகின்றார். அதன் உதவியால் பலர் குளிர் காய்கின்றனர்.

அது போல மிகவும் சிரமப்பட்டுத் தவம் செய்து இறைவனை அடைந்த மகான்களோடு பழகுவதால் பலர் இறைவனிடத்தில் சுலபமாக மனத்தை வைக்க முடிகிறது. (ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேசம்)

எனை நான் என்பது அறியேன்பகல்
இரவு ஆவதும் அறியேன்

மனவாசகம் கடந்தான் எனை
  மத்த உன்மத்தன் ஆக்கிச்
சினமால்விடை உடையான் மன்னு
  திருப்பெருந்துறை உறையும்
பனவன் எனைச் செய்தபடிறு
  அறியேன் பரம் சுடரே." (திருவாச.பா. 508)

- திருமாலை பெரிய இடப வாகனமாகக் கொண்டவனே!
- நிலைபெற்று விளங்கும் திருப்பெருந்துறையில் வாழும் முனிவனே!
- மேலான ஒழிப்பிழம்பே!

மனத்துக்கும் சொல்லுக்கும் அப்பாற்பட்டு விளங்கும் அவன், என்னை "நான்" என்று அறியா வகை செய்தான், பகல் இரவு தெரியாதபடி செய்தான். பெரிய பித்தன் ஆக்கினான். இவ்வாறு ஆவதற்கு என்ன சூழ்ச்சி செய்தானோ, நான் அறியேன் என்கிறார் மாணிக்கவாசகர்.

"நானுமாக ஈசன் இருக்கிறான்" என்கிறது வேதாத்திரியம்.

"நானே ஈசன்" சொல் விடுத்து,
  "நற்பொருளான ஈஸ்வரனே"
நானுமாக இருக்கின்றனர்.
  "ஞாலம் உயிர்கள் அனைத்து மவன்."
நான் இவ்வுண்மை உணர்ந்த பயன்
  நல்லுலகுக்கே எனை ஈந்தேன்.
நானினித் தூயன் என நின்று,
  நற்றொண்டாற்றி இன்புறுவீர்!" (ஞாக.பா.1599)

நானே ஈசன் என்று ஒரு மனிதர் கூறினார் என்றால், இவர் ம ட்டு மே கடவுள் என்று கூறுவதாகப் பொருள்படும்.

அதனால் இம்மனிதருக்குத் தன்முனைப்பும் எழுச்சியுறும்.

ஆகவே நானே கடவுள் எனக் கூறுவதை விடுத்து மேன்மையான, மெய்ப்பொருளான, உயிர்களில் கலப்புற்றுள்ள ஈஸ்வரனே, நானுமாக ஆகியுள்ளான் என்று கூறும்போது தன்முனைப்பு எழாது.

உலகம், உயிர்கள் அனைத்திலும் இறைநிலையே இருந்து, காத்து, முடித்தும் வைக்கிறது என்ற உண்மையை நான் உணர்ந்த கொண்டதன் பயனாகவே, என்னை உலக நலத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டேன்.

நான் ஆன்ம களங்கங்களிலிருந்து விடுபட்டு தூய்மையானவனாக உள்ளேன் என்று உள்ள உறுதியுடன், நல்முறையில் தொண்டு செய்து இன்புறுவீர்களாக!

உயிர்கள் அனைத்திலும் கலப்புற்றுள்ள இறைநிலை என் உள்ளும் புறமுமாகவும் இருக்கிறது என்ற உண்மை உணர்வில் தன்முனைப்பு இல்லாமல் தொண்டு செய்து இனிது வாழ்வோம். வாழ்க வளமுடன்

## 5. எனைத்தான் புகுந்து ஆண்டான்

"சாதனா சித்தர்கள், கிருபா சித்தர்கள் என்று சாதகர்கள் இரண்டு வகைப்படுவர்.

இன்னும் நித்திய சித்தர் என்னும் மற்றொரு வகையினரும் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு பிறவியிலும் பிறக்கும்போதே பூரண ஞானம் உதிக்கப் பெற்றவராய் விளங்குகின்றனர்.

ஒரு நீருற்றின் வாய் அடைப்பட்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். ஒரு வேலைக்காரன் இங்கும் அங்கும் தோண்டிப் பல காரியங்களைக் கவனித்து வரும்போது தற்செயலாக அந்த நீரூற்றின் வாய் திறந்து கொள்கிறது.

அப்போது ஊற்று நீர் "கள கள" வென்று சப்தமிட்டபடி வெளியே பாய்கிறது.

ஒரு நித்திய சித்தருக்கு முதன் முறைா யகக் கடவுளின் மீது ஏற்படும் ஆழ்ந்த பக்தியின் தீவிரத்தை (அனுராகம்) மக்கள் பார்க்கும்போது பெரிதும் ஆச்சரியமடைகிறார்கள்.

"இவ்வளவு பக்தியும், வைராக்கியமும், பிரேமையும் இத்தனை நாள் எங்கிருந்தன?" என்று அவர்கள் வியக்கிறார்கள்." (ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் பாகம் 1, பக்.353-354)

வினைக்கேடரும் உளரோபிறர்
  சொல்லீர் வியன் உலகில்
எனைத்தான்புகுந்து ஆண்டான்என
  என்பின்புரை உருக்கிப்
பினைத்தான்புகுந்து எல்லே பெருந்
  துறையில் உறை பெம்மான்
மனத்தான் கண்ணின் அகத்தான் மறு
  மாற்றத்து இடை யானே.
(திருவாச.பா. 509)

திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருக்கும் எனது பெருமான், என்னுள் புகுந்து என்னை ஆட்கொண்டான்.

எனது எலும்பில் உள்ள துளைகளில் முன்நோக்கியும் பின்னிருந்தும் பேரி னபத்தைப் பாய்ச்சி. ஐயகோ! உருகுமாறு அருள் செய்தான்.

அவன் என் மனத்துள் இருக்கிறான். கண்ணுள் இருக்கிறான். என் சொல்லிலும் இருக்கிறான்.

அவனைப் போல இப்பெரிய நில உலகில் வினையை ஒழிப்பவர் வேறு யார் உளர். இருந்தால் சொல்வீராக! என பாடுகிறார் மாணிக்கவாசகர்.

”வினைத்தூய்மை அனைவர்க்கும் இன்பம் நல்கும்” என்பது வேதாத்திரியம்.

”வினைத்தூய்மை அனைவர்க்கும் இன்பம் நல்கும்.
  விரிந்த மனத்தூய்மை மெய்ஞ்ஞானம் ஈட்டும்.
வினைத்தூய்மை மனத்தூய்மை உயிர்க ளூடே
  உயர்அன்பு தொண்டுஈகை உண்டுபண்ணும்.
வினைத்தூய்மை மனத்தூய்மை பெறதற் கென்றே
  வேதம்மதம் உயர்நூல்கள் விரிந்ததாகும்.
வினைத்தூய்மை மனத்தூய்மை வெறுப் பொழித்து
  விழிப்புநிலை, அன்புஇரக்கம் இயல்பாய் ஆக்கும்” (ஞாக.பா.1287

மனிதர்கள் நலம், தீது என்று பிரித்துணர்ந்து செயலாற்றும் ஆறாவது அறிவு இருந்தும் குறையறிவின் காரணமாக பழக்கத்தின் வழியே பல பிறவிகளில் வாழ்ந்து வந்த நிலையால், துன்ப வாழ்வையே அனுபவிக்கிறார்கள்.

ஆகவே திருத்தம் கொடுக்க வேண்டியது அ சியமாகிறது.

பழக்கங்களை விளக்க வழியில் செயலாற்றினால் எல்லோருக்குமே இன்பம் உண்டாகும்.

செயலுக்கு மூலமான மனதைத் தூய்மை செய்வதால் மனவிரிவு ஏற்பட்டு மெய்யுணர்வு மலர்த்தும்.

மனத்தூய்மையும் வினைத்தூய்மையும் உடன் வாழும் உயிர்களுக்கிடையில் உயர்வான அன்பை வெளிப்படுத்தி, தொண்டு மனப்பான்மையையும், பிற உயிர்க்கு உதவும் ஈகை குணமும் உருவாகும்.

மனித குலத்திற்கு மனத்தூய்மையும் வினைத் தூய்மையும் அவசியமாகும். அவற்றை மக்கள் கடைபிடித்து வாழ்வதற்கென்றே வந்தவைகள் தான் வேதம், மதம், உயர்நூல்கள் ஆகும்.

வினைத் தூய்மையும் மனத் தூய்மையும் சினத்தின் மற்றொரு வகையான வெறுப்புணர்வை ஒழித்து விடும்.

விளைவறிந்த விழிப்பு நிலையாகாது. அன்பையும், இரக்கத்தையும் இயல்பானதாக ஆக்கிவிடும்.

## 6 நற்றாம் கதி அடைவோம்

வாழ்வின் பேருண்மையைப் புரிந்து கொள்ள ஒருவனைச் சென்று காணும்படி கற்பரசி ஒருத்தி, அந்த துறவியை ஆற்றுப்படுத்தினாள்.

துறவியும் அவள் சொன்ன இடத்துக்குச் சென்றார். அந்த இடம் ஓர் இறைச்சிக் கூடம். அங்கே ஒருவன் பெரிய கத்தியால் இறைச்சியை வெட்டி, விலைபேசி விற்றுக் கொண்டிருந்தான்.

'இவனிடம் எந்த உயர்ந்த உண்மையை அறிந்து கொள்ள முடியும்?' என்ற ஐயம் துறவிக்கு எழுந்தது. ஆனாலும், அந்த பத்தினிப் பெண் அனுப்பி வைத்த விவரத்தை வெளிப்படுத்தினார்.

'வியாபாரம் முடிந்ததும் வீட்டுக்குச் சென்று பேசுவோம்' என்றான் கத்தியுடன் இருந்தவன். கடையை மூடியதும் இருவரும் நடந்தனர்.

வீட்டை அடைந்ததும் துறவியை இருக்கையில் அமரச் சொல்லிவிட்டு, அவன் பெற்றோரிடம் சென்றான்.

அவர்களை நீராட்டி, உணவூட்டி, பெற்றவர் மனம் மகிழ சேவை செய்து, அவர்கள் உறங்கியபின் துறவியிடம் வந்து அமர்ந் தான் இறைச்சி விற்பவன்.

அவனுடன் சிறிது நேரம் பேசியதில் அவனுக்குள் சுடர் விடும் ஆன்ம ஒளியைத் தரிசித்த துறவி, 'இவ்வளவு உயர்ந்த ஞானம் உடைய நீ ஏன் இந்த இறைச்சி விற்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறாய்?' என்று கேட்டார்.

"ஐயனே, செய்யும் கடமைகளுள் எதுவும் இழிந்ததில்லை. இறைச்சி விற்பது என் குடும்பத் தொழில். இல்லறக் கடமைகளை ஒழுங்காகச் செய்து வருகிறேன்.

என்னைச் சார்ந்தவர்களது தேவையறிந்து சுயநலப் பற்றின்றி நிறைவேற்றுகிறேன்.

தங்களைப் போல காட்டில் இருந்து யோகம் பயில என்னால் இயலாது. வீட்டில் இருந்தபடி இயன்றளவு பிறர் நலம் போற்றுகிறேன்.

செயலைத் துறக்காமல், செயலின் விளைவைத் துறந்து வாழ்வதே பற்றற்ற பெருவாழ்வு என்பதை நான் நன்றாகவே புரிந்து கொண்டிருக்கிறேன்' என்று விளக்கினான் அந்த விவேகி.

அறத்துக்குப் புறம்பின்றி, எதன் மீதும் அதிகமான பற்று வைக்காமல், தாமரை இலைத் தண்ணீராய் வாழ்வதே உயர்ந்த வாழ்க்கை நெறி.

துன்பம் தரும் உலகப் பற்றுகளில் இருந்து விடுபட, இதயத்தில் இறைவனைப் பற்றி நிற்பதே ஒரே வழி. வாழ்க்கை பயணத்தில் வருவது அனைத்தும் நில்லாது ஒருநாள் நீர்க்குமிழாய் மறைந்துவிடும் என்ற ஞானம் கனிந்தவனுக்கு, எதன் மீதும் ஆசை எழாது.

'பற்றுக பற்றற்றான் பற்றினை, அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு' என்ற வள்ளுவமே மண்ணில் நல்ல வண்ணம் வாழ உயர்ந்த வழிகாட்டி. (சுவாமி விவேகானந்தர் கதைகள்)

பற்று ஆங்கு அவை அற்றீர் பற்றும்
  பற்று ஆங்குஅது பற்றி
நற்றாம் கதி அடைவோம் எனில்
  கெடுவீர் ஓடி வம்மின்
தெற்றார்சடை முடியான் மன்னு
  திருப்பெருந்துறை இறைசீர்
கற்றாங்குஅவன் கழல்பேணின
  ரோடுகூடுமின் கலந்தே.
(திருவாச.பா. 510)

உலகில் கெட்டு அழிந்து கொண்டு இருப்பவர்களே! உலகத்துப் பற்றுக்களை ஒழித்தவராய், பற்ற வேண்டிய பரம்பொருளைப் பற்றி, நல்ல கதி அடைய விரும்புவீரானால், ஓடி வாருங்கள்!

தேன் ஒழுகும் மலர்மாலைகள் சூடிய சடைமுடியை உடைய, நிலைபெற்று விளங்கும் திருப்பெருந்துறைக்கு அரசனாய் இருப்பவனது, பெருமை பொருந்திய ஞானநூல்களில் ஓதி உணர்ந்தபபடி ஒழுகி. அவனது திருவடியைக் கலந்து நிற்கும் அடியாரொடும் கூடிக் கலப்பீராக!

பற்றற்ற வாழ்வு வாழ்ந்தால் பரம்பொருளைப் பற்றி நல்ல கதி அடையலாம் என்பது வேதாத்திரியம்.

"இனம்சாதி, தேசம்மொழி, மதம் பற்றற்று
  இயற்கையமைப்பு அறிவுநிலை அறிந்து, மேலாம்
மனிதனென்ற ஒரு நினைவில், பாசம் பற்றை
  மறந்துதொண் டாற்றி பிறர் துன்பம் தீர்க்கும்
புனிதஉள்ளம் செயலுடையோர் எண்ணிறந் தோர்.
  புவிமீது அதிகரிக்க அதி கரிக்க
கனிவுமிகும். அருள்பெருகும். சமுதாய த்தின்

களங்கங்கள் மறைந்துவிடும். உலகம் உய்யும்." (ஞாக.பா.422)

மனித வாழ்வின் நோக்கம் இனிமையாக வாழ்வது ஆகும். இயற்கைக்கு முரண்பட்டும் சமுதாய உணர்வு இன்றியும் வாழ்ந்து பல லட்சக்கணக்கான பிறவிகளைத் தாண்டி வந்துள்ள மனித குலத்திலே இனிமை இல்லை.

ஆறாவது அறிவு என்னும் உண்மைப்பொா   ருள் மேன்மைப் பொருளான மனமாக மலர்ந்துள்ளது என உணர்ந்து, தானும் இனிமையாக வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கக் கூடிய தனது தெய்வீகப் பண்பை மனிதன் மறந்து, சுயநல நோக்கத்தோடு, இனம் என்றும் சாதி என்றும் தேசம் என்றும் மொழி என்றும் மதம் என்றும் எல்லைகட்டிய மனதினால் பாசம் பற்றுக்களி  ல சிக்கிக் கொண்டுள்ளான்.

இயற்கையின் அமைப்பையும், இயக்க ஒழுங்கையும், செயல் விளைவு நியதியையும் அறிந்து, அந்த இயற்கையின் ஒரு பகுதி அறிவு தன்னில் இருப்பதை உணர்ந்து, எல்லா சீவ இனங்களிலும் உயர்ந்த சீவனாக மனிதனாக இருப்பதையும் உணரவேண்டும்.

அந்த உணர்வில், மன விரிவின் காரணமாக பாசம் பற்று என்பவைகள் மறந்து பிறர் துன்பம் தீர்க்கும் செயல்கள் மலரும்.

தூய்மையான எண்ணம், சொல் செயலுடையவர்கள் நிலவுலகில் அதிகரிக்க அதிகரிக்க, அன்பு மிகுதியாகும்.

கருணையால் செயல்கள் அதிகமாகும். சமுதாயக் குற்றங்கள் மறைந்து உலகம் நற்கதி பெறும்.

## 7.உடலிலும் உயிரிலும் புகுந்து நீக்கமற நிறைந்தான்

சாதாரண சாதகர்கள் தீவிரமான சாதனை மூலம் நாதத்தைக் கடந்து செல்கிறார்கள்.

அப்படிக் கடந்து சென்ற நிர்விகல்ப சமாதியை அடைந்தார்களானால் அவர்களால மீண்டும் இந்தச் சாதாரண உலக நிலைக்குத் திரும்ப முடியாது.

அவர்கள், "பால் தண்ணீரில் கரைவது போல்" பிரம்மத்தில் கரைந்து விடுவார்கள்." (சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம் பாகம் 10, பக்.78)

கடலின்திரையதுபோல் வரு
கலக்கம் மலம் அறுத்துஎன்
உடலும்எனது உயிரும்புகுந்து

ஒழியாவண்ணம் நிறைந்தான்
சுடரும்சுடர் மதிசூடிய
திருப்பெருந்துறை உறையும்
படரும் சடை மகுடத்து எங்கள்
பரன்தான் செய்த படிறே.” (திருவாச.பா. 511)

ஒளிரும் சந்திரனைச் சூடிய சடையை உடைய திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருக்கும் எங்கள் இறைவன், கடல் அலை போல் தொடர்ந்து வரும் குழப்பம் செய்யும் மும்மலங்களை அறுத்து எறிந்துவிட்டு, எனது உடலிலும் உயிரிலும் புகுந்து நீக்கமற நிறைந்தான். இது எம் இறைவன் செய்த சூழ்ச்சியே என்கிறார் மாணிக்கவாசகர்.

ஆன்மா எல்லா உயிர்களிலும் நிறைந்திருக்கிறது. அவ்வாறே அறிப்படுகிறது. எல்லா உயிர்களிலு ம நிறைந்தாக அதனைத் தியானிக்க வேண்டும்.

ஆன்மா எல்லா உயிர்களிலும் நிறைந்திருப்பதை யார் அறிகிறானோ அவனை எல்லா உயிர்களும் நேசிக்கின்றன.

பிரம்மமமாகிய பேரறிவே நமது அறிவு என்று உயர் ஞான நிலையை வேதாத்திரியம் சொல்லும் போது,

“அவன் நீ ஒன்றா அறிந்த இடம்
அறிவு முழுமை அது முக்தி”

என்கிறது.

எல்லா உயிர்களும் ஒருவனை நேசிச்கின்ற அளவே அவனது முக்தி நிலை.

முக்தி என்பது மரணத்திற்குப் பின் அடையக்கூடிய அல்ல. மாறாக நாம் வ ழ்கிற காலத்திலேயே வேண்டாததை வடிகட்டி, வேண்டியதற்கு படிகட்டி பிற உயிர்களை எத்துணையும் பேதமுறாது தம் உயிர்போல் எண்ணி, அனைத்து உயிகட்கும் அன்பு செய்கிற பக்குவத்தை நாம் அடைந்துவிட்டால், நாம் அடைந்த நிலையே முக்தி.
.

# 8. வேண்டாமை வேண்டும்.

**தூய பக்தர்களின் பிரார்த்தனைகள் எப்படி இருக்கும் தெரியுமா? சில உதாரணங்கள்**

**பக்த பிரஹலாதர்:** தன் தந்தை ஹிரண்யகசிபுவால் பல்வேறு துன்பங்களை அனுபவித்தபோதிலும், மாறாத பக்தி கொண்டிருந்த

பிரஹலாத மகாராஜர் எல்லா இன்னல்களிலிருந்தும் காப்பாற்றப்பட்டார்.

ஐந்தே வயதான தனது பக்தனுக்காக அவர் ஓர் அற்புத அவதாரமே எடுத்தார்.

நரசிம்மர் தனது தூய பக்தனான பிரஹலாதரிடம் என்ன வரம் வேண்டும் என்று கேட்டதற்கு, வரம் வேண்டி பக்தி செய்வதற்கு தான் ஒரு வியாபாரி அல்ல என்று பணிவுடன் எடுத்துரைத்த பிரஹலாதர், அவ்வாறு ஏதேனும் வரமளிக்க விரும்பினால், தனது இதயத்தில் துளியும் பௌதிக ஆசைகள் இல்லாமல் இருக்கும்படி வரமளிக்க வேண்டினார்.

மேலும், பகவானை அறியாமல் இவ்வுலகில் சுற்றித் திரியும் அனைத்து மூடர்களையும் அவரது திருவடி சேவைக்கு கொண்டு வர அவர் விரும்பினார்–வேறு விதமாகக் கூறினால், அவர் தனது சொந்த முக்தியில்கூட ஆர்வம் காட்டவில்லை.

**குந்திதேவி:** தனது வாழ்வில் பல்வேறு துன்பங்களை அனுபவித்த குந்திதேவி, அத்துன்பங்கள் அனைத்தும் மீண்டும் மீண்டும் வேண்டும் என்று வேண்டுகிறார்;

ஏனெனில், அத்துன்பங்கள் இருந்தபோது, அவரால் பகவானை மீண்டும் மீண்டும் தரிசிக்க முடிந்ததே.

மேலும், பௌதிக வாழ்வில் ஆர்வமற்றவர்களால் (சலிப்படைந்தவர்களால்) மட்டுமே பகவானை அடைய முடியும் என்றும் அவர் தெளிவுபடுத்துகிறார்.

செல்வம், உயர்குடி, கல்வி, அழகு போன்றவற்றைப் பெற முயற்சி செய்பவர்களால் உண்மையான உணர்வுடன் கிருஷ்ணரை நெருங்கவே முடியாது என்று கூறி, பௌதிக விஷயங்களை அடைய நினைப்பதும் பக்தியும் வெவ்வேறு என தெளிவுபடுத்துகிறார்.

**குலசேகர ஆழ்வார்:** மன்னராக இருந்து அதன் பின்னர் தனது அரச பதவியைத் துறந்து வாழ்ந்த குலசேகர ஆழ்வார், தனது முகுந்த மாலை ஸ்தோத்திரத்தில்...

(5), “எனதருமை பகவானே! எனக்கு பௌதிக அறக் கொள்கைகளில் ஆர்வம் இல்லை, செல்வம் சேகரிப்பதற்கோ இந்திரிய சுகங்களை அனுபவிப்பதற்கோ ஆர்வம் இல்லை.

என் கர்ம வினைப் பயனால் எனக்கு வந்து சேர வேண்டியவை அனைத்தும் தானாக வரும்.

தங்களின் தாமரைப் பாதங்களுக்கு பிறவிதோறும் மாறாத தொண்டு புரிதல் என்னும் மிகவுயர்ந்த வரத்தை மட்டுமே நான் வேண்டுகிறேன்," என்று கூறுகிறார்.

இவ்வாறு பாடுவதன் மூலம் மிகவுயர்ந்த வரம் என்ன என்பதை நமக்கு அவர் போதிக்கின்றார்.

**பக்தி வினோத தாகூர்:** கௌடீய வைஷ்ணவ ஸம்பிரதாயத்தின் மிகச்சிறந்த ஆச்சாரியர்களில் ஒருவரான பக்திவினோத தாகூர், எத்தனை பிறவிகள் எடுத்தாலும் பக்தனாக வாழ வேண்டும் என்று வேண்டுகிறார்.

*"கீ ஜன்ம ஹௌஎ ஜதா துவா தாஸ், பஹீர்-முக ப்ரஹ்ம-ஜன்மே நாஹி ஆஷ்."* பக்தனாக பிறக்க நேரிட்டால், புழுவின் உடலில் பிறவியெடுத்தாலும் பரவாயில்லை என்றும், பக்தனாக இல்லாவிடில் பிரம்மாவின் பிறவியும் தனக்கு வேண்டாம் என்றும் அவர் வேண்டுகின்றார்.

**சைதன்ய மஹாபிரபு:** பக்தியை எவ்வாறு பயிற்சி செய்ய வேண்டும் என்பதை மக்களுக்கு எடுத்துரைப்பதற்காக அவதரித்த பகவான் சைதன்ய மஹாபிரபு, உயர் மதிப்புடைய தனது பிரபலமான சிக்ஷாஷ்டகத்தில் பின்வருமாறு வேண்டுகிறார்:

"நதனம் ந ஜனம் ந ஸுந்தரீம்
கவிதாம் வா ஜகத் ஈஷ காமயே
மம ஜன்மனி ஜன்மனீஷ்வரே
பவதாத் பக்திர் அஹைதுகீ த்வயி"
"

"எல்லாம் வல்ல பெருமானே, பொருள் வேண்டேன், என்னைப் பின்பற்றுவோரும் வேண்டேன், அழகிய பெண்களும் வேண்டேன்; ஒவ்வொரு பிறவியிலும் உமக்குக் களங்கமற்ற பக்தித் தொண்டாற்ற வேண்டும் என்பதை மட்டுமே யான் வேண்டுகிறேன்."

அவர் மேலும் கூறுகிறார்:

ஆஷ்லிஷ்ய வா பாத ரதாம் பினஷ்டு மாம்
அதர்ஷனாம் மர்ம ஹதாம் கரோது வா
யதா ததா வா விததாது லம்படோ
மத் ப்ராண நாதஸ் து ஸ ஏவ நாபர:

"கிருஷ்ணர் என்னை முரட்டுத் தனமாக நடத்தினாலும், அணைத்துக் கொண்டாலும், என்முன் தோன்றாது என் இதயத்தை நோகச் செய்தாலும், அவரே என் பிரபுவாவார்.

அவரைத் தவிர வேறு யாரையும் நான் என் இறைவனாக அறியேன். என்னிடம் எவ்வாறு வேண்டுமானாலும் நடந்துகொள்ள அவருக்கு பூரண உரிமை உண்டு.

எல்லா சூழ்நிலையிலும் அவரே எனது பிராண நாதர், இதில் எந்த நிபந்தனையும் இல்லை

**இறுதி விளக்கம்**

சிறிதளவு பக்தி செய்துவிட்டு, அதற்குப் பலனாக பகவான் தனக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று பெரும்பாலான மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

தாங்கள் வேண்டியது கிடைக்கவில்லையெனில், வழக்கமாகச் செல்லும் கோவிலுக்குப் போகாமல் வேறு கோவிலுக்குச் செல்லுதல், நாத்திகம் பேசுதல், மதம் மாறுதல் போன்றவை அனைத்தும் இன்றைய உலகில் சாதாரணமாக நடப்பவை.




ஆனால் முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரின் தூய பக்தர்கள், பணம், பொருள், தேவலோக வாழ்வு, புகழ், கல்வி, ஆரோக்கியம், யோக சக்திகள் போன்றவை மட்டுமின்றி, முக்தியையும் வேண்டுவதில்லை.

கிருஷ்ணரே வரம் பெற்றுக் கொள்ளும்படி கேட்டாலும் அப்பக்தர்கள் பௌதிக நன்மைகளை வேண்டுவதில்லை.

ஸ்ரீ ராமானுஜருக்காக கண்களை இழந்த கூரத்தாழ்வார், வரதராஜ பெருமாளிடம் கண்களைத் தரும்படி வேண்டுகோள் விடுக்க மறுத்ததை இங்கு நினைவுகூர்வோம்.

“எனதென்றுனு ஏதுமில்லை, எல்லாம் உன் அடைக்கலமே” என்று பகவானை சரணடைந்து, பக்தித் தொண்டை மட்டும் வேண்டுவதே மிகச்சிறந்த பிரார்த்தனையாகும்.

**ஆழ்வார்களின் பிரார்த்தனைகளில் சில**

பச்சை மா மலை போல் மேனி, பவளவாய், கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச் சுவை தவிர, யான் போய் இந்திர-லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்க மா நகருளானே!

“திருவரங்கனே, பச்சை நிற மலை போன்ற திருமேனியும், பவள வாயும், செந்தாமரை போன்ற சிவந்த கண்களும் பெற்றவனே! தேவர்களின் தலைவனே! இடையர் குலத்தின் கொழுந்தே! உலகில் உம் பெயர் சொல்வதால் உண்டாகும் சுவையை விட்டு, வானுலகை ஆளுகின்ற பேறு கிடைப்பதாக இருந்தாலும், அதனை நான் விரும்ப மாட்டேன்.” (தொண்டரடிப் பொடி ஆழ்வார், திருமாலை, நாலாயிர திவ்ய பிரபந்தம்,873)

”கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணி-அரங்கன் என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்று ஒன்றினைக் காணாவே”

“கார்முகிலின் வண்ணனை, ஆயர்பாடிக் கண்ணனாய் வந்து கள்ளத்தில் வெண்ணெய் உண்டவனை, என் உள்ளம் கவர் கள்வனை உலகின் முதல்வனை – அழகிய திருவரங்கத்திலுள்ள ஆரா அமுதனைக் கண்ட கண்கள் மற்ற எவற்றையும் காண ஆசைப்படாது.” (திருப்பாணாழ்வார், நாலாயிர திவ்ய பிரபந்தம்,936)

”எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்; உமக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றை நங்காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்”

“எத்தனை பிறவிகள் எடுத்தாலும், உம்மோடு உறவு கொண்டவர் களாகவே இருப்போம். உமக்கு மட்டுமே அடிமையாயிருக்கக் கடவோம், அதைத் தவிர மற்ற விருப்பங்களை தவிர்த்தருள வேண்டும்.” (ஆண்டாள், திருப்பாவை, நாலாயிர திவ்ய பிரபந்தம்,502)

எனவே, பக்தர்கள், உலகாய பொருட்களை வேண்டுவதை வேண்டாமல் இருக்க வேண்டும். உயர்ந்த பக்தர்களைப் பின்பற்றி அவர்களைப் போன்று பிரார்த்திக்க வேண்டும்.

வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம்
  வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பு இறப்புச்சிவம்
  வேண்டார் தமைநாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு
  திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன் புறம் போகேன் இனிப்
  புறம் போ கர“ ஒட்டேனே. (திருவாச.பா. 512)

நிலைபெற்று விளங்கும் திருப்பெருந்துறை இறைவனது திருவடிகளைச் சென்று சேர்ந்து விட்டேன்.

எனவே புகழ், செல்வம், மண்ணுலக வாழ்வு, விண்ணுலக வாழ்வு, பிறப்பு, இறப்பு என்று எதனையும் விரும்ப மாட்டேன்.

சிவத்தை அடைய நினையாதவரைத் தொடமாட்டேன். இனி வேறு நெறிகளை நாட மாட்டேன். இறைவனது திருவடிகள் என் மனதைவிட்டு நீங்க இடம் தரவும் மாட்டேன் என்கிறார் மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகர் வேண்டேன் புகழ்" என்றாலும் இன்றளவும் அவரது புகழ் ஆன்மீக உலக் கில் நிலைத்துதானே நிற்கிறது.

அவரது புகழலால் பல சாதகர்கள் அவர் வழியில் இன்றும் பயணித்துக் கொண்டுதானே இருக்கிறார்கள்? சரி.
புகழ் பற்றி வேதாத்திரியம் என்ன சொல்கிறது.

## புகழ் மனித சமுதாய நற்சான்றாகும்

"புகழுக்கு விரும்புவாயேல், அந்த வேட்பே புகழ் மூலமாகத்

புகழ் அணுகாமல் துரத்தும் சக்தியாகும்.

புகழ் ஒருவர் கடமை எனும் மலர் மணமாம்

புகழ் மனித சமுதாய நற்சான்றாகும்." (ஞாக.பா.1617)

புகழ் என்பது ஒருவரின் கீர்த்தியைப் பாராட்டினைக் குறித்து மேன்மைப்படுத்திக் கூறப்படும் வார்த்தையாகும்.

பிறர் நலன் குறித்து சிந்தித்தும், சமுதாய நலன் விரும்பியும் வாழ்கின்ற வரை, மானுடம் பாராட்டுத் தெரிவிக்கின்ற வகையில், எண்ணுவதும் சொல்லுவதுமான மதிப்புக்களை வெளிப்படுத்துவது புகழ் ஆகும்.

கடமை உணர்வில் கர்மயோகிய வாழ்பவருக்கு மக்கள் காட்டும் நன்றி உணர்வும் பாராட்டுமே புகழ் ஆகும்.

கடமை என்னும் மலர் மலருமேயானால், அதன் வாசனையால் கவரப்பட்ட வண்டினங்கள் பூச்சிகள் முதலியன மலரை நாடி வந்து தேன் அருந்தி, மகரந்தச் சேர்க்கைக்கும் உதவுகிறது.

அந்த மலரின் மனம் போன்றது - கர்மயோகிகளின் கடமை அறம். கடமை அறத்தை செய்யாமல் ஒருவர் தான் புகழ்பெற வேண்டும் என ஆசைப்பட்டால், அந்த ஆசையே புகழை அணுகவிடாமல் துரத்துகின்ற சக்தியாகிவிடும்.

கர்மயோகம் என்பது இயல்பாக அமைந்தால் புகழ் என்பதும் தானாகவே வரும். நாமாகத் தேடிப் போனால் புகழானது நம்மை அணுகாது.

உயர் புகழ் பற்றி வேதாத்திரியம் அழகாக விரிவாக விளக்கமாக சொல்கிறது.

- ”புகழ் மூலமாகத்தான் நமக்கு மற்றவர்களோடு தொடர்பும், நட்பும் கிடைக்கின்றன, உயர்புகழ் என்பது எப்படியும் புகழ் பெறலாம், இருக்கலாம். எப்படி வேண்டுமானலும் பெறலாம் என்பது அல்ல. உலகத்துக்கு நன்மையான செயல்களையே செய்து அதனாலே மக்கள் மனம் ஒரு நிறைவு பெற்று அவர்கள் வாழ்க்கையிலே துன்பங்கள் நீங்கி இன்பம் மலரக் காணும்போது, அந்த மக்களால் அளிக்கக்கூடிய ஒரு வாழ்த்து ஒரு மனநிறைவுதான் ”உயர்புகழ்”
- புகழ் என்பது தான் விரும்பிப் பெறுவதோ. தானே ஏதேனும் ஒன்றைச் செய்து அதன் மூலமாக வரவேண்டும் என்று நினைப்பதோ அல்ல. தன் செயலின் மூலமாக மக்கள் காட்டும் மனநிறைவுதான் புகழாகும்.” (வேதாத்திரிய சிந்தனை விருந்து – தினசரி தியானம்)

கர்மயோகம் என்பது இயல்பாக அமைந்தால் புகழ் என்பதும் தானாகவே வரும். நாமாகத் தேடிப் போனால் புகழானது நம்மை அணுகாது.

# 9.இன்ப ஊற்றாய் நிறைந்த இறைவா!

”சிலர் இறைவனின் காட்சியைப் பெற்ற பின்னும் முன் வினைப்ப்யனைக் கழித்துக்கொள்ள உடலில் வாழ்ந்துவருவர். அல்லது மக்களுக்குப் போதிக்க உடல் தரித்திருப்பர்.

கங்கையில் குளித்தெழுந்த பிறகு ஒருவனுடைய பாவங்கள் தொலைந்து, முக்தி கிடைக்கிறது.

இருப்பினும் கண் குருடு மறைவதில்லை. ஆனால் ஊழ்வினை காரணமாக இன்னும் எத்தனை பிறவிகளை எடுக்க வேண்டுமோ அவைகளை இனிமேல் எடுக்க வேண்டியதில்லை.

எந்தப் பிறவி ஏற்பட்டிருக்கிறதோ அந்தப் பிறவி நின்றுவிடும். பிறப்பறுத்த நிலை. இவர்களிடம் கர்மவினை, காமம், வெகுளி என்பன எரிந்து விடுகின்றன.

உடல் மட்டும் ஒரு சில முன்வினைகளைக்“ கழிக்க வேண்டி மேலும் சில நாட்கள் தங்குகிறது.” (ஶ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் பாகம் 1 – பக்.282)

கோற்றேன் எனக்கு என்கோ குரை
  கடல்வாய் அமுதது என்கோ
ஆற்றேன்எங்கள் அரனே அரு
  மருந்தே எனது அரசே
சேற்றார்வயல் புடைசூழ் தரு
  திருப்பெருந்துறை உறையும்
நீற்றார்தரு திருமேனிநின்
  மலனே உனையானே. (திருவாச.பா. 513)

- எங்களின் பிறப்பை அறுப்பவனே!
- பிறவி நோக்கு அரிய மருந்தே!
- எனது அரசனே!
- சேறு நிறைந்த வயல்களால் சூழப்பட்ட திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருக்கும் நீறுபூசிய திருமேனி உடையவனே!
- மனமற்றவனே!

நீ தந்த இன்பத்தைப் பொறுக்க முடியாதவனாய் இருக்கிறேன். உன்னை கொம்புத் தேன் என்பேனா? ஒலிக்கும் அலைவீசும் கடலில் கிடைத்த அமிழ்தம் என்பேனா? (என்ன சொல்லிப் புகழ்வேன்?

மறைபொருள் உணர்ந்த நிறைவுக் கவி வேதாத்திரியத்தில் அமிழ்தமாக அமைந்துள்ளது.

"இன்று நான் நிறைவு பெற்றேன்! இறைவா!
இன்று நான் நிறைவு பெற்றேன்!

நின்றேன் நடந்தேன். உன்னை நினைந்த தேடியலைந்தேன்.
சென்றேன் பல இடங்கள் சிந்தனை விரிந்த பின், (இன்று)

இறைவெளி காட்சியாக, எல்லோரும் பார்த்துக் கொண்டே மறைவாய்
உள்ளாய் நீயென்று. மாற்றுரை பகர்கின்றார்!
பிறைமுதலாய் சந்திரன் பெருத்து முழுவதாம் போல்,
குறையறிவை விரித்தால் கொள்ளலாம் உனையுள்ளே (இன்று)

இருப்பு நிலை வெளியாய், இயக்க அலை விண்ணாகி,
உருப்பொருள் அத்தனையும், உருவான தறிந்திட்டேன்,
கருப்பொருள் காந்தமாகி, கண்டு கேட்டுண் டுணரும்,
திருப்பொருள் மனமாகத் திகழ்வதை உணர்ந்தபின்! (இன்று)

பேரியக்க மண்டலம் பெரிதுதான் என்றாலும்,
ஓரியக்கமாய் உந்தன் உடலாய் அதைக் காண்கின்றேன்.
சீரியக்கங்கள் எல்லாம் சித்திக்கப் பெரும் வியப்பு
யாரியக்க வல்லாரே உனையன்றிப் பேரண்டத்தை? (இன்று)

அன்பும் கருணையுமான், அகன்ற நிலையிலுள்ளாய்!
என் மனதை விரித்து இணைத்துக் கொண்டாய் உன்னுள்ளே!
கன்ம வினைகளெல்லாம் கழிந்தன. உணர்கின்றேன்!

உன்னையறிந்து உய்ய, உலகோர்க்குத் தொண்டு செய்வேன்) (இன்று) (ஞாக.பா.1651)

# 10.அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம்

"நான் என்ற எண்ணமும் தளைகளும் மறைந்த பிறகுதான் மனிதனால் கடவுளைக் காணமுடியும்.

நான் பெரிய அறிவாளி, நான் புகழ் பெற்ற இன்னாருடைய மகன், நான் பணக்காரன், நான் புகழ் பெற்றவன் என்ற எண்ணங்கள்தாம் தளைகள். அவைகளைத் துறந்தால்தான் இறைவனது காட்சி கிடைக்கும்." (ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள் பாகம்11 – பக்.35)

எச்சம் அறிவேன்நான் எனக்கு
  இருக்கின்றதை அறியேன்
அச்சோ எங்கள் அரனே அரு
  மருந்தே எனது அமுதே
செச்சைமலர் புரைமேனியன்
  திருப்பெருந்துறை உறைவான்
நிச்சம்என நெஞ்சில்மன்னி
  யானாகி நின் றானே. (திருவாச.பா. 514)

- எங்கள் பிறப்பை அறுப்பவனே!
- பிறவி நோக்கு அரிய மருந்தே!
- எனது அமுதமே!
- வெட்சிப்பூ போன்ற சிவந்த மே  ன உடையவனே!
- திருப்பருந்துறையில் எழுந்தருளி இருப்பவனே!

உறுதியாக என் மனத்தில் நிலைபெற்று, அவனே நானாக இரண்டறக் கலந்து நின்றவனே!

நான் இன்னும் பெற வேண்டிய மிச்சம் என்ன என்பதை அறிவேன். பெற்றதை அறிய மாட்டேன். இது வியப்புக் உரியது அன்றோ?

"நான் யார்?" என்ற கேள்விக்கு உள்
  நாடி, உண்மை விடை கண்டோர்,
"நான் நிறைவான பரம்" என்றார்
  நாவால் மட்டும்பிறருக்கு
"நான்தெய்வம்" என்றுரைத்து. பதில்
  நல்ல உணவைப் பெறுவர் பலர்!
"நான் பிரம்மம்" ஆம் கருத்தறிந்த
  நல்லோர் உலகுக்கு ஒளி போல்வர்!" (ஞாக.பா.1132)

நான் யார்? என்ற கேள்வி ஒவ்வொரு மனிதரிலும் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்படுவது இயல்பு.

அகநோக்கு தவப்பயிற்சியின் மூலம், உடலுக்குள் உயிர், உயிர்க்குள் அறிவு, அந்த அறிவே தெய்வமாகவும் உள்ளது என்பதை உணர்ந்தவர்கள் ”நான் எங்குமே நிறைவான பரம்” என்று உணர்ந்ததை உணர்ந்தவாறு கூறினார்கள்.

ஆனால் வாய் வார்த்தையாக நான் கடவுள் என்று பலரும் கூறி அதற்குப் பிரதியாக நல்ல உணவைப் பெற்று உண்பார்கள்.

இறைநிலையாகிய பிரம்மமே எல்லாமாக ஆகி, எல்லாவற்றிலும் இருப்பாக இருந்து இயக்கிக் காத்து முடித்தும் வைக்கிறது.

அதுவே நானாகவும் இருக்கிறது என்ற கருத்தை உணர்ந்த நல்லவர்கள் உலகுக்கு ஒளி காட்டும் உயர்வானவர்கள் ஆவர்.

## 11. உய்யும் நல்வழி உள்ளுணர் தவமே;

”சாதாரண மனிதனின் மனம் பல்வேறு பொருள்களில் சிதறுண்டு கிடக்கிறது. தியான காலத்திலும் ஆரம்பத்தில் மனம் அலைபாயலாம்.

மனத்தில் எந்த எண்ணம் எழுந்தாலும் சரி. நீ அமைதியாக இருந்து எவ்வகை எண்ணங்கள் வருகின்றன என்று விழிப்போடு பார்.

தொடர்ந்து இம்முறையில் ஆராய்ந்தால் மனம் அமைதி பெறுகிறது. எண்ண அலைகள் அதில் எழுவதில்லை.

இந்த அலைகள் மனத்தின் எண்ண செயல்களுக்கு அடையாளமாகும். நீ முன்பு எந்த விஷயங்களைப் பற்றி ஊன்றி ஆலோசித்தாயோ, அவை உள்மன ஊற்றாக மாறியுள்ளன.

தியானத்தின்போது இவை மேலே எழுகின்றன. அவற்றின் எழுச்சி, தியானத்தில் உன் மனம் மேலும் மேலும் ஒருமை நிலையை அடைகிறது என்பதற்கு அறிகுறி.

மனம் ஒரே வகையான எண்ணங்களில் ஒடுங்கி நிற்பதை மாற்றங்களுடன் கூடிய, ஸவிகல்ப சமாதி என்கிறோம்.

ஆனால், இந்த மனம் செயல்களிலிருந்து விடுபட்டு எல்லையற்ற ஞானத்தின் சாரமாகிய ஆன்மாவுடன் ஒன்றும்போது தனக்குத் தானே ஆதாரமாகிறது.” (சுவாமி விவேகாந்தரின் ஞான தீபம் - பாகம்10, பக்.356)

வான்பாவிய உலகத்தவர்
  தவமே செய அவமே
ஊன்பாவிய உடலைச் சுமந்த
  அடவிமரம் ஆனேன்
தேன்பாய்மலர்க் கொன்றைமன்னு
  திருப்பெருந்துறை உறைவாய்
நான்பாவியன் ஆனால் உனை
  நல்காய் எனலாமே. (திருவாச.பா. 515)

- திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருக்கும் தேன்பாயும் கொன்றை மலர் மாலை அணிந்தவனே!

வான உலகத்தவர் தவம் செய்யவும், நான் அவமே செய்து, ஊனால் ஆகிய இந்த உடம்பைச் சுமந்து காட்டு மரம் போல் நிற்கிறேன். தீவினை உடையவனாகிய எனக்கு, உன் திருவருளைத் தந்து அருளுவாயாக. என்று வேண்டலாமா? கூறுவாயாக!

தவத்தால் திருவருளைப் பெறலாம் என்கிறது வேதாத்திரியம்.

மனம் தன் திறமையையும் வல்லமையையும்
பெருக்கிக் கொள்ளும் பயிற்சியே *குண்டலினி யோகம்*

*அறிவின் நிலையுணர்:*

"அறிவயறியுங்கால் அரூபநிலை உயிர் விளங்கும்
அறிவாக உயிர் ஆற்றும் அற்புதங்கள் விளக்கமாம்."

*அறிவின் நான்கு நிலைகள்:*

"அறிவறிய வேண்டு மெனில் புலன் கடந்து
  அறிந்துள்ள அத்தனையும் கடந்து நின்று
அறிவிற்கு இயக்ககளப் பொருள் பரம
  அணுவான உயிர்நிலையை உணரவேண்டும்.
அறிவங்கே உயிராகும் துரியமாகும்
  அந்நிலையும் கடந்துவிடத் துரியாதீதம்
அறிவிந்த நான்கு நிலைகளில் அவ்வப்போ
  அனுபவமாய் நின்று நின்று பழக வெற்றி."

*தவம்:*

"தெய்வ அறிவே திருந்திய அறிவாம்;
உய்யும் நல்வழி உள்ளுணர் தவமே;
செய்யும் வினைகளைச் சீரமைத்திட
ஐயமில்லை அறும் பிறவித்தொடர்."

*இயற்கை முறை தவம் (Simplified Kundalini Yoga)

”ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் பழக்க
  உறுதி, நுட்பம், சக்தி இவை யதிகமாகும்
அன்று அன்று அடையும் அனுபவங்கள் எல்லாம்
  அறிவினிலே நிலைத்து விடும். ஆழ்ந்து ஆய்ந்து
நன்று என்று கண்டபடி செயல்கள் ஆற்றும்
  நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்
என்றென்றும் கருவிடத்தே அறிவை ஒன்றும்
  இயற்கைமுறை சிறப்புடைத்து ஈதே தவமாம்.”

*தவத்தின் பயன்கள் பத்து:*

1) மனித வாழ்வின் பெருநிதியாகிய கருமையத்தை தூய்மையாகவும், வலுவுடையதாகவும், அமைதியும் இன்பமும் பெருக்கும் திறனுடையதாக்கவும் உதவுகிறது.
2) மனிதனின் இறையுணர்வும், உயிர் விளக்கவும், அறநெறி நின்று வாழும் தன்மையும் உண்டாக்கும்.
3) மனத்தின் விரியும் தன்மை பெருகுகிறது.
4) எண்ணம், சொல், செயல்களில் தவறு செய்யா விழிப்பு நிலை மேலோங்குகிறது.
5) அறிவின் திறன்கூடி அதன் கிரகிக்கும் சக்தி கூடுகிறது.
6) ஒத்துப் போதல், சகித்துக் கொள்ளுதல் போன்ற பண்புகள் மலர்கின்றன.
7) அவ்வப்போது செய்துவிடக் கூடிய தவறுகளையும், நம்மிடம் இருக்கக் கூடிய தீய குணங்களையும் களைந்து தூய்மையைப் பெருக்கிக் கொள்ள துணைபுரிகிறது.
8) ஆக்கப் பூர்வமான செயல்களை ஆற்றும் திறன் ஓங்குகிறது.
9) தன் அமைதி, குடும்ப அமைதி, சமுதாய அமைதி மூலம் உலக அமைதிக்கு வழி வகுக்கிறது.
10) நடக்கக் கூடியதையே நினைக்கச் செய்து நினைத்ததையே நடக்கச் செய்கிறது.

# துணைநின்ற நூல்கள்.


1. திருவாசகம், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
2. திருவாசகம், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
3. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
4. இணையதள தகவல்கள்.
5. ஞானக்களஞ்சிய கவிகள், இரா. மாரியம்மாள் மோகன்தாஸ், வேதலோக அன்பு நிலையம், பொள்ளாச்சி

6. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
7. மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார்.
8. சுவாமி விவேகானந்தரின் ஞானதீபம், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை
9. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை